கிறிஸ்தவ

# திருச்சபை வரலாறு

(பாகம் 2)

ஆர். பாலா

சவறின் கிரேஸ் வெளியீடுகள்

**கிறிஸ்தவ திருச்சபை வரலாறு (பாகம் 2)**

Sovereign Grace Publications
P O Box 62 159, Sylvia Park, Auckland, NZ

ஆசிரியர்:
**ஆர். பாலா**

நூல் வடிவமைப்பு:
M. **ஜேம்ஸ்**

நூல் வடிவமைப்பு விவரங்கள்:
எழுத்து: 10.75/13.75 வள்ளுவன்;
நூல்: 5.6" x 8.6"; பக்கங்கள்: 118

முதல் பதிப்பு: ஜூன் 2013, இந்தியா

கிடைக்குமிடம்:
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர், அயனாவரம்,
சென்னை 600023, தமிழ்நாடு, இந்தியா.
தொலைப்பேசி: +91 9445671113

Available at:
6/87 Kamarajar Street,
Thiruvalluvar Nagar, Ayanavaram,
Chennai 600023, Tamilnadu, India.
Mobile: +91 9445671113

குறிப்பு: இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துப் படங்களும் இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

# அர்ப்பணம்

*இலக்கியப்பணியில் என்னை ஊக்குவித்து வருகிறவர்கள் அநேகர். அவர்களில் குறிப்பிட்ட சிலரின் ஊக்குவிப்பும், ஆதரவும் வார்த்தைகளால் விவரிக்க முடியாதளவுக்கு அளவற்றவை. அந்தப் பட்டியலில் முதலிடத்தை என் மனைவிக்குத்தான் தர வேண்டும். என்னுடைய எழுத்துப்பணிக்காக அவர் செய்யும் தியாகம் அதிகம். திருச்சபை வரலாற்றின் இந்த இரண்டாம் பாகத்தை அவருக்காக அர்ப்பணிக்கிறேன்.*

# பொருளடக்கம்

என்னுரை ........ 7

செடி வளர்ந்து பூப்பூத்திருக்கிறது ........ 7

வரலாற்று நூல் எழுதுவதென்பது ஏனைய நூல்கள் எழுதுவதைவிட வித்தியாசமானது. ........ 9

ஜெர்மனியில் ஆரம்பமான சீர்திருத்தம் ........ 13

மார்டின் லூத்தர் (Martin Luther) ........ 13

டெட்செலும் பாவமன்னிப்பு பத்திரங்களும் (Tetzel and the Indulgences) ........ 15

லிப்சிக்கில் (Leipsic) நிகழ்ந்த வாதங்கள் ........ 19

வேர்ம்ஸில் (Worms) கூடிய சபைக் கவுன்சில் கூட்டம் ........ 22

ஸ்பியரில் (Speier) கூடிய ஆலோசனைக் கூட்டங்கள் ........ 25

லூத்தரின் மண வாழ்க்கையும் எழுத்துப்பணியும் ........ 27

சுவிட்ஸர்லாந்தில் சீர்திருத்தம் ........ 29

திருவிருந்து, ஞானஸ்நானம் பற்றிய கருத்து வேறுபாடு ........ 29

அனாபாப்திஸ்து இயக்கமும் அவர்களின் போதனைகளும் ........ 32

உல்ரிக் சுவிங்லி (Ulrich Zwingli) ........ 36

ஜெனிவாவில் ஜோன் கல்வின் (John Calvin) ........ 40

இங்கிலாந்தில் சீர்திருத்தம் ........ 53

எட்டாம் ஹென்றியின் (Henry VIII) அரசியல் சீர்திருத்தம் ........ 53

கத்தோலிக்க அரசி மேரியின் கொடூரமான துன்புறுத்தல் ........ 58

ஹியூ லத்திமர் (Hugh Latimar) ........ 60

தொமஸ் கிரேன்மர் (Thomas Cranmer) ........ 63

வில்லியம் டின்டேல் (William Tyndale) ........ 66

ஸ்கொட்லாந்தில் சீர்திருத்தம் .......... 72
- பெட்ரிக் ஹெமில்டன் (Patrick Hamilton) .......... 72
- ஜோர்ஸ் விஷ்சார்ட் (George Wishart) .......... 74
- ஜோன் நொக்ஸ் (John Knox) .......... 76

பிரான்ஸில் புரொட்டஸ்தாந்து சீர்திருத்தம் .......... 85
- சீர்திருத்தவாதிகளான ஹியூகநொட்கள் .......... 88
- ஹியூகநொட்களின் தலைவர்கள் .......... 89
- ஹியூகநொட்களை அழிக்க கெத்தரின் வகுத்த சதி .......... 90
- சந்தர்ப்பவாதியான நான்காம் ஹென்றி .......... 96
- ரோமன் கத்தோலிக்க மதப்பிரிவான ஜெசுயிட்கள் .......... 98
- மறுபடியும் ஹியூகநொட்களுக்கு பெருந்துன்பம் .......... 100

நெதர்லாந்தில் சீர்திருத்தம் .......... 104
- சீர்திருத்தத்திற்கெதிராக செயல்பட்ட ஐந்தாம் சார்ள்ஸ் .......... 105
- இரண்டாம் பிலிப்பும், ஒரேஞ்சின் வில்லியமும் .......... 108
- ஜெக்கோபஸ் ஆர்மீனியஸ் (Jacobus Arminius) .......... 114

# என்னுரை

**செடி வளர்ந்து பூப்பூத்திருக்கிறது**

*திருச்சபை வரலாற்றின் முதலாவது பாகத்தை 2012ல் வெளியிட்டிருந்தேன். அந்நூல் முதல் நூற்றாண்டில் இருந்து திருச்சபை கிறிஸ்துவின் வழிநடத்தலின்படி அப்போஸ்தலர்களால் அமைக்கப்பட்டு எவ்வாறு வளர்ந்தது என்பதையும் பின்பு மூன்றாம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு சபைத் தலைவர்கள் சத்தியத்திற்கு மதிப்புக்கொடுக்காமல் போன காரணத்தால் ஏழாம் நூற்றாண்டுகளுக்குள் ரோமன் கத்தோலிக்க மதம் உருவாகி பல நூற்றாண்டுகளுக்கு போலிச் சபையாக நாடுகளை எவ்வாறு ஆக்கிரமித்திருந்தது என்பதையும் கண்டோம். உயர முடிந்தளவுக்கு கத்தோலிக்க மதம் உயர்ந்து பின்பு எவ்வாறு வீழ்ச்சியைத் தழுவியது என்பதையும், போப்பின் அதிகாரம் எப்படித் தரையிறக்கப்பட்டது என்பதையும் அதில் விளக்கியிருந்தேன். இந்தக் காலப்பகுதியில் சத்தியம் இல்லையோ என்று கேட்குமளவுக்கு ரோமன் கத்தோலிக்க மத ஆட்சி உலகில் இருந்திருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் அக்கிரமமாக வெட்டிச் சாய்க்கப்பட்டிருக்கின்றனர். ஆத்மீக விடுதலை கொடுக்கிறோம் என்ற ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு அந்த மதம் செய்த அநியாயத்துக்கு அளவில்லை. அவர்களை எதிர்த்து நின்றவர்களுடைய இரத்தப்பலியில் வளர்ந்ததே கிறிஸ்தவ சபை.*

*திருச்சபையை உருவாக்கிய தேவன் அது இந்த உலகில் தொடர வேண்டும் என்பதற்காக ஜோன் ஹஸ், விக்கிளிப்*

போன்றவர்களை எழுப்பி சீர்திருத்தவாத காலம் உருவாவதற்கு முன்பே சுவிசேஷத்தை சொல்லவும், சத்தியத்தைத் தாங்கவும் பயன்படுத்தியிருக்கிறார். அத்தோடு மறுமலர்ச்சிக் காலப்பகுதியில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட ஆராய்ந்து எதையும் சிந்திக்கும் மனப்பான்மை, புதிது புதிதாக எதையாவது கண்டுபிடிக்க வேண்டும் என்ற துடிப்பு, அச்சுக்கூட கண்டுபிடிப்பு, மனிதநலவாத சிந்தனை ஆகியவற்றையும் பயன்படுத்தி 16 ஆம் நூற்றாண்டு திருச்சபை சீர்திருத்தவாத எழுச்சிக்கு கர்த்தர் அடிகோளினார். அதுவரையிலான திருச்சபை வரலாற்றை விளக்கும் நூலாக மலர்ந்திருந்தது திருச்சபை வரலாற்றின் முதல் பாகம்.

முதல் பாகத்தைப் படித்துவிட்டு இதுதான் மெய்யான திருச்சபை வரலாறு, இதைத் தமிழில் வாசிக்கும் வசதியில்லாமல் இருந்த குறை தீர்ந்துவிட்டதே என்று மகிழ்ச்சியோடு ஒரு போதகர் தன்னுடைய மனக்கருத்தைப் பகிர்ந்துகொண்டார். பல தடவைகள் முதல் பாகத்தை வாசித்துவிட்டு ஆனந்தக் களிப்படைந்த ஒரு போதக நண்பர் தனக்கு ஊழியத்தில் ஒரு புத்துணர்வை நூல் தந்திருப்பதாக நேரில் தன் மகிழ்வைப் பகிர்ந்துகொண்டார். தமிழ் கிறிஸ்தவர்களுக்கு முதல் பாகம் புதிய உத்வேகத்தையும், கிறிஸ்துவில் வைராக்கியத்தையும் ஏற்படுத்துவதோடு கிறிஸ்தவ ஊழியத்தில் இருக்கும் போதகர்களுக்கு மெய்யான திருச்சபை வரலாற்றை அறிந்து உணர்ந்து தியாக மனப்பான்மையோடு ஊழியப்பணி செய்யும் ஆசீர்வாதத்தையும் தருமானால் அதுவே நூலுக்கு கிடைத்த ஆசீர்வாதமாக இருக்கும்.

இந்த இரண்டாம் பாகத்தில் 16 ஆம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க மதத்தின் ஆளுகைக்கு முடிவு கட்டி, மறுபடியும் வேதம் மனிதர்களின் மொழிகளிலெல்லாம் மொழிபெயர்க்க வசதி ஏற்பட்டு, மறைத்து வைக்கப்பட்டிருந்த மெய்யான சுவிசேஷத்தை அனைவரும் கேட்பதற்கும் வேதத்தின் போதனைகளைப் பின்பற்றி திருச்சபைகள் இந்த உலகத்தில் அமைவதற்கும் காரணமாக இருந்த திருச்சபை சீர்த்திருத்த வரலாற்றை விளக்கியிருக்கிறேன். இதை சீர்திருத்தவாத காலம் (Reformation period) என்று கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவார்கள். இது அப்போஸ்தலர்களுடைய காலத்தைப்

போல கிறிஸ்தவ சபை வரலாற்றில் ஒரு பொற்காலமாக இருந்தது. சிறந்த கிறிஸ்தவ திருச்சபைத் தலைவர்களான மார்டின் லூத்தர், ஜோன் கல்வின், ஜோன் நொக்ஸ், ஹியூ லத்திமர், வில்லியம் டின்டேல் போன்ற தலைசிறந்த கர்த்தரின் மனிதர்களையெல்லாம் அடையாளம் காட்டும் சிறப்பான காலப்பகுதி இது. முக்கியமாக வேதம் மட்டுமே, கிருபை மட்டுமே, விசுவாசம் மட்டுமே, கிறிஸ்து மட்டுமே என்ற ஆணித்தரமான வேதசத்தியங்களை மறுபடியும் இந்த உலகில் நிலைநாட்டிய காலப்பகுதி இது. கிறிஸ்தவ வேதத்தை இன்று நம்முடைய மொழியில் நாம் வாசிக்கவும், கிறிஸ்துவை விசுவாசித்து திருச்சபையில் ஆராதனை செய்யவும் முடிகிறதென்றால் அதற்கெல்லாம் நம் கர்த்தர் 16 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் செய்த அற்புதங்கள்தான் காரணம்.

**வரலாற்று நூல் எழுதுவதென்பது ஏனைய நூல்கள் எழுதுவதைவிட வித்தியாசமானது.**

நடந்து முடிந்த வரலாற்று சம்பவங்களை ஏற்கனவே வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ள நூல்களை வைத்து ஆராய்ந்து அவற்றின் அடிப்படையிலும், அதேநேரம் நம்முடைய பார்வையிலும் வரலாற்று உண்மைகளை உள்ளவாறு எழுத வேண்டும். முதலாவது பாகத்தைப் போலவே இதற்காகவும் அநேக நூல்களையும், கட்டுரைகளையும் நான் ஆராய்ந்திருக்கிறேன். பயன்படுத்திக்கொண்ட நூல்களின் பட்டியலை இன்னொரு பகுதியில் காணலாம். இந்நூலை நான் ஒரே மூச்சில் எழுதி முடிக்கவில்லை என்பதைச் சொல்லியாக வேண்டும். முதல் பாகமும், இதுவும் ஏற்கனவே “திருமறைத்தீபம்” இதழில் பல காலங்களாக வெளிவந்தவை. அவற்றைத் தொகுத்து அங்காங்கே திருத்தங்களைச் செய்து இப்போது நூல் வடிவில் தந்திருக்கிறேன். மெய்த் திருச்சபை வரலாறு தமிழில் இருக்க வேண்டும் என்ற என்னுடைய பலவருட கனவு நிறைவேறி வருவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூலை நான் ஆராய்ச்சி நூலாக முனைவர் பட்டத்துக்காக படிக்கிறவர்கள் வாசித்துக் கருத்து தெரிவிப்பதற்காக எழுத வில்லை. திருச்சபை வரலாறு என்பதே அதிகம் படித்தவர்கள் வாசிக்கின்ற ஒரு நூல் என்ற தவறான கருத்தை அநேகர் மனதில் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில்

கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் தவறாமல் வாசிக்க வேண்டிய அற்புதமான, வரலாற்றில் கர்த்தர் நிகழ்த்திய சம்பவங்கள் அவை. சிறுபிள்ளைகள் வாசிப்பதற்கு உதவும் வகையிலும் திருச்சபை வரலாறு அவர்களுக்கும் எழுதப்பட வேண்டும் என்பதில் நான் அழுத்தமான கருத்து கொண்டிருக்கிறேன். ஆகவே, கிறிஸ்தவ வாசகர்கள் தங்குதடையில்லாமல் வாசித்து திருச்சபை வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு இலகுவான தமிழில் இதை எழுதியிருக்கிறேன். வேற்று மொழிப் பெயர்களைத் தமிழில் மாற்றி எழுதுவதென்பது சுலபமானதல்ல. அதனால் அந்தப் பெயர்களை அடைப்புக்குறிக்குள் ஆங்கிலத்திலும் தந்திருக்கிறேன். அது நூலை வாசிப்பதற்கு தடையாயிருக்காது என்று நம்புகிறேன். வாசிக்கிறவர்கள் வாசிக்கும்போது சோர்வு அடைந்துவிடக்கூடாது என்பதற்காகவே நூற்றுக்கணக்கான குறிப்புகளை ஒவ்வொரு பக்கத்திற்கு கீழும் நூலின் பின்புறத்திலும் தராமல் இருந்திருக்கிறேன். அதெல்லாம் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் அவசியம். சாதாரண கிறிஸ்தவ வாசகர்களுக்கு அவசியமில்லை. அவர்கள் கையில் எடுத்த நூலைப் படித்து முடிக்கும்வரை கீழே வைத்துவிடாமல் இருக்க வேண்டும் என்பதில் நான் அதிக அக்கறை காட்டியிருக்கிறேன். இருந்தபோதும் வரலாற்று நூலுக்குரிய அவசியமான அம்சமான வரலாற்று நிகழ்ச்சிகளை உள்ளது உள்ளபடி காலக்குறிப்புகளைத் தந்து விபரிப்பதில் கவனமாக இருந்திருக்கிறேன்.

வரலாற்று நூல்தானே, அதனால் அதில் சுவாரஸ்யத்துக்கு இடமிருக்கக்கூடாது என்று உப்புச்சப்பில்லாமல் நூலை எழுதாமல் இலகுவான தமிழில் நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகத் தர முயன்றிருக்கிறேன். ஆங்காங்கு நூலில் நிகழ்ச்சிகள் பற்றிய என்னுடைய பார்வை என்ன என்பதை வரலாற்றை எந்தவிதத்திலும் பாதிக்காதபடி தந்திருக்கிறேன். கிறிஸ்தவர்கள் சபை வரலாறு தெரியாமல் இருப்பது அவர்களுடைய விசுவாசத்துக்கு பெரிய ஆபத்தை விளைவிக்கும் என்று நான் எப்போதும் சொல்லி வந்திருக்கிறேன். தமிழ்க் கிறிஸ்தவர்களில் பலர் அப்போஸ்தலருடைய நடபடிகளுக்கு முன்பு நிகழ்ந்தவற்றையோ, அதற்குப்பிறகு நிகழ்ந்தவற்றையோ இன்றைக்கும் அறியாமல் இருந்துவருகிறார்கள். சபை

வரலாற்றை அறியாமல் இருப்பது உண்மையில் நம்மை விசுவாசத்தில் குழந்தையாக இருக்க வைத்துவிடும். பலவீனமான குழந்தைகளால் சத்தியத்தின் எதிரிகளோடு போராடி வெற்றி காண முடியாது. போலிப்போதனைகள் மலிந்து காணப்படும் இந்தக் காலங்களில் மெய்க்கிறிஸ்தவத்தை இனங்கண்டு கொள்ளவும், நம்முடைய விசுவாசத்தில் உறுதியாக இருக்கவும், தவறுகளைத் திருத்திக்கொள்ளவும் திருச்சபை வரலாறு அவசியம் தேவை. அதுவும் போதிக்கும், பிரசங்கிக்கும் ஊழியத்தில் இருப்பவர்களுக்கு அது இன்றியமையாதது.

திருச்சபை வரலாற்று நூல் தமிழில் எத்தனை இருக்கிறது என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அப்படிப்பட்டவற்றை தேடி அலைந்திருக்கிறவர்கள் வாசிக்கும்படியாக மெய் வரலாற்றை விவரிக்கும் நூல் ஒன்றும் இல்லை என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இருப்பவையும் ரோமன் கத்தோலிக்க மத அடிப்படையிலும், தாராளவாதக் கோட்பாட்டுக்கு ஒத்துப் போகும் வகையிலும் எழுதப்பட்டு மெய்க்கிறிஸ்தவ திருச்சபை வரலாற்றை மறைத்து வைத்திருப்பவையாக இருக்கின்றன என்கிறார்கள். நிச்சயமாக இந்தப் பாகம் மெய்க் கிறிஸ்தவ திருச்சபை பற்றிய வரலாற்றை உள்ளது உள்ளபடியே உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. அதுவும் 16 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதகால வரலாற்று உண்மைகளைத் தமிழ் வாசகர்கள் தவறாது அறிந்துகொள்ள வேண்டும். அதன் மூலம் ஓர் உத்வேகத்தை வாழ்க்கையில் அடையவேண்டும் என்ற ஆதங்கத்தோடு இது எழுதப்பட்டிருக்கின்றது.

முதல் பாகத்தை அற்புதமாக அவசியமான அநேக படங்களுடன் தயாரித்து சகோதரர் ஜேம்ஸ் உதவியிருக்கிறார். அதேபோல இதையும் அச்சுக்குப் போகும் வரையிலும் தேவையான அனைத்தையும் செய்து தயாரித்திருக்கிறார். இதில் அவருடைய பணி நூலை எழுதியிருக்கும் என்னுடையதைப் போன்றே சரிசமமானது என்று சொன்னால் மிகையாகாது. பெருங்காயம் இல்லாமல் சாம்பார் சுவைக்காது. இதில் யார் பெருங்காயம், யார் சாம்பார் என்ற வேறுபாடு தெரியாதளவுக்கு சேர்ந்து உழைத்திருக்கிறோம். பல காலமாக நான் பணியாற்றி வரும் சபையின் ஒத்துழைப்பில்லாமல் இது வெளிவந்திருக்க முடியாது. அவர்களுடைய ஜெபமும், ஆதரவும் இந்நூல்

*வெளிவர நிச்சயம் காரணமாக இருந்திருக்கிறது. இந்நூல் வெளிவருவதில் மட்டுமல்லாது கிறிஸ்தவ ஊழியத்தில் நான் செய்து வருகின்ற அத்தனை பணிகளுக்கும் ஊக்கங்கொடுத்தும், அநேக தியாகங்களைச் செய்தும் உதவுகின்ற என் மனைவியின் பங்கு வார்த்தைகளில் சொல்ல முடியாதளவுக்கு அதிகமானது. இவர்களுக்கெல்லாம் வார்த்தையால் இப்போதைக்கு என் நன்றியை மட்டுமே நான் சொல்ல முடிகிறது. நூலை நேரத்துக்கு நேர்த்தியாய் அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திருச்சபை வரலாற்றில் அப்போஸ்தலருடைய காலப்பகுதிக்கு அடுத்ததாக எனக்குப் பிடித்த காலப்பகுதிகளில் ஒன்று 16 ஆம் நூற்றாண்டு. நான் விசுவாசிக்கும் சத்தியங்களோடு தொடர்புடைய ஒரு காலப்பகுதி அது. அதற்குமேலாக வேதத்தை நான் வாசிப்பதற்கு உருக்கொடுத்த ஒரு காலப்பகுதி அது. அது தமிழில் எழுத்தில் வர வேண்டும் என்றெல்லாம் பல வருடங்களுக்கு முன்பாக ஆசைப்பட்டிருக்கிறேன். நானறிந்த சத்தியங்கள் பலரையும் சென்றடைய இந்தக் காலப்பகுதியின் வரலாறு முக்கியம் என்பதை உணர்ந்துதான் அதை திருமறைத்தீபத்தில் எழுத ஆரம்பித்தேன். அந்தச் செடி வளர்ந்து இன்று பூப்பூத்திருக்கிறது என்பதில் எனக்கு அதிக மகிழ்ச்சி. என் கிறிஸ்தவ நம்பிக்கைகளிலும், வாழ்க்கையிலும் 16 ஆம் நூற்றாண்டு எந்தவகையில் ஒரு பெரு மாற்றத்தை ஏற்படுத்தியதோ அதையும்விட மேலான ஆசீர்வாதத்தை உங்களுக்குத் தர வேண்டும் என்ற ஜெபத்தோடு இந்த நூலை உங்களுக்கு வழங்குகிறேன்.*

**ஆர். பாலா, போதகர்**
*சவறின் கிரேஸ் சபை*
*(சீர்திருத்த பாப்திஸ்து)*
*நியூசிலாந்து*

# ஜெர்மனியில் ஆரம்பமான சீர்திருத்தம்

**மார்டின் லூத்தர்** (Martin Luther)

*மனிதநலவாதிகள்* (Humanists) *திருச்சபை சீர்திருத்தத் திற்கான பாதையை அமைப்பதில் அதிக பங்கைப் பெற்றிருந்த போதும் அவர்களால் திருச்சபையில் மெய்யான வேத அடிப்படையிலான சீர்திருத்தத்தைக் கொண்டுவர முடியவில்லை. திருச்சபை சீர்திருத்தமாகிய எழுப்புதல் ஏற்படுவதற்கு ஒரு மனிதன் ஆழமான ஆத்மீக தாகத்தையும், விசுவாசத்தையும், நெஞ்சுரத்தையும் கொண்டிருக்க வேண்டும். சுவிசேஷத்திலும், அதை அறிவிப்பதிலும் நெருப்பாக எரியும் வாஞ்சையையும், உத்வேகத்தையும் தனக்குள் கொண்டிருக்க வேண்டும். இவற்றோடு அதிக திறமைகளையும், பெருந்தைரியத்தையும் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய மனிதனாகவே ஜெர்மனியில் திருச்சபை சீர்திருத்தத்திற்காகக் கர்த்தரால் எழுப்பிப் பயன்படுத்தப்பட்ட மார்டின் லூத்தர் இருந்தார்.*

*நவம்பர் 10 ஆம் நாள், 1483ல் லூத்தர் வறுமையில் வாடிய ஒரு சுரங்கத் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்தார். இதனால் தொழிலாளிகளின் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களை அவர் நன்றாக ஆரம்ப காலத்தில் இருந்தே அறிந்துவைத்திருந்தார். ஆரம்பக் கல்வியை முடித்தபின் ஏர்பர்ட் பல்கலைக்கழகத்தில்* (Erfurt University) *1501ல் சேர்ந்தார். அங்கே ஜோன் வெசல்* (John Wesel) *என்ற மனிதநலவாதியின் நட்பு*



மார்டின் லூத்தர்

அவருக்குக் கிடைத்தது. சட்டக் கல்வி பயிலுவதில் திறமைசாலியாகவும், தத்துவம், இசை ஆகியவற்றில் அதிக திறமையையும் கொண்டிருந்த லூத்தர் பலரும் ஆச்சரியப்படும்படியாக ஆகஸ்தீனியன் குருப்பயிற்சிக்காக (Augustinian Eremites) தன்னை அர்ப்பணித்தார். சிறுவனாக இருந்த காலத்தில் இருந்தே லூத்தருக்கு ஆத்மீகத்தில் பெரும் பிடிப்பு இருந்தது. பெலேஜியன் (Pelagian) போதனையைப் பின்பற்றிய அவருடைய வழிகாட்டிகள் உபவாசத்தாலும், ஜெபத்தாலும், பாவங்களுக்கு பலிகளைச் செலுத்துவதன் மூலமும் இரட்சிப்பை அடைய வழிதேடிக்கொள்ளும்படிப் போதித்தார்கள். வேதத்தை வாசிக்க அவருக்கு அனுமதியிருக்கவில்லை. பாவப்பலிகளைச் செலுத்தியும், தொடர்ந்து பாவங்களை அறிக்கையிட்டும் தனக்கு மேலிருந்தவர்களுக்கு அவர் அதிகம் தொல்லை கொடுத்தார். இருந்தும் அவருக்கு சமாதானம் ஏற்படவில்லை. அவருக்கு வயது இருபதாக இருந்தபோது கையில் இலத்தீன் மொழியில் இருந்த ஒரு வேதப்புத்தகம் கிடைத்தது. அவருக்கு மேல் மடத்தில் பதவியில் இருந்த ஜோன் ஸ்டௌபிட்ஸ் (John Staupitz), அந்த வேதப்புத்தகத்தை வாசிக்கும்படியும், கிறிஸ்து மட்டுமே பாவங்களில் இருந்து விடுதலை தரக்கூடியவர் என்றும் லூத்தருக்கு அறிவுரை கூறினார். இலத்தீன் மொழியில் இருந்த வேதத்தை லூத்தர் கவனத்தோடு வாசிக்க ஆரம்பித்தார். புதிய ஏற்பாட்டில் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தை அவர் தொடர்ந்து வாசித்தபோது தேவ சமாதானம் அவருக்குக் கிடைத்தது. தொடர்ந்து அவர் ஆகஸ்தீனின் (Augustine) நூல்களை வாசித்தபோது இயேசு கிறிஸ்துவின் மூலமே கர்த்தர் பாவிகளுக்கு பாவ நிவாரணம் தருகிறார் என்பதையும்,



ஜோன் ஸ்டௌபிட்ஸ்

*அவர்கள் தங்களுடைய சொந்த நற்கிரியைகளின் மூலம் பாவத்தில் இருந்து விடுதலை அடைய முடியாது என்பதையும் தெளிவாக அறிந்து கொண்டார். இரட்சிப்பு கர்த்தருடைய கிருபையின் மூலமாக மட்டுமே கிடைக்கிறது என்பதும் அவருக்குத் தெளிவாயிற்று. அதற்குப் பிறகு குருமட வாழ்க்கையிலும், மதத்தின் பெயரால் செய்து வந்த புறக்கிரியைகளிலும் அவருக்குப் பிடிப்பில்லாமல் போனது. தொடர்ந்து அவர் எபிரெய மொழியிலும், கிரேக்க மொழியிலும் வேதத்தைப் பயில ஆரம்பித்தார். முக்கியமாக பவுல் அப்போஸ்தலன் எழுதிய நூல்களை ஆர்வத்தோடு படிக்க ஆரம்பித்தார்.*



**லூத்தர் புத்தகங்களை வாசித்துக்கொண்டிருக்கும் காட்சி**

**டெட்செலும் பாவமன்னிப்பு பத்திரங்களும்**
(Tetzel and the Indulgences)

*இக்காலத்தில் போப்பாக இருந்த லியோவுக்கு (1513-1521), புனித பேதுருவின் ஆலயத்தைக் கட்டி முடிக்கவும், தன்னுடைய ஆடம்பர வாழ்க்கை செலவிற்கும் அதிகம் பணம் தேவைப்பட்டது. அப்பணத்தைச் சேர்க்க பாவமன்னிப்பு பத்திரங்களை சபை மக்களுக்கு விநியோகிக்க லியோ திட்டம் போட்டார். இத்தகைய வியாபார உத்தி இதற்கு முன்பே சபையில் பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன.*



**போப் லியோ**